**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ATTUR.**

**DEPOSITION OF WITNESS**

**Sessions Case No. 81/2022**

**Prosecution witness No.8**

| | |
|---|---|
| **Name** | **: சக்திவேல்** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **: காவல் உதவி ஆய்வாளர், வீரகனூர் காவல் நிலையம்** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**(Accused present. Counsel Present. )**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 02.02.2026.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:-</u>

1) நான் தற்போது வீரகனூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 25.09.2021ம் தேதி ஆத்தூர் ஊரக காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது பகல் 15.30 மணிக்கு ஆத்தூர் தாலுக்கா, விநாயகபுரம், நேதாஜி நகர் தெற்கு தெருவில் வசிக்கும் சின்னதம்பி மகன் கண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் ஆத்தூர் ஊரக காவல் நிலைய எண்.368/2021 சட்ட பிரிவு 387 இத.ச 3(1) தமிழ்நாடு சொத்தழிப்பு சட்டம் 92 படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி கண்ணன் கொடுத்த புகார் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் நகல்களையும் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் சம்மந்தப்பட்ட ஆத்தூர் குற்றவியல் நடுவர் எண்.1 க்கு அனுப்பியும் மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை பொறுப்பு காவல் ஆய்வாளர்

தம்மம்பட்டி காவல் நிலையம் திரு.முருகேசன் வசம் ஒப்படைத்தேன். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

2) புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் நான் வழக்கு பதிவு செய்துள்ளேளன் என்றும் சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரை விசாரணை செய்ததில் தெரிய வந்தது. புள்ளி விவர கணக்கிற்காக மேற்படி வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S
Digitally signed by GANESAN S
Date: 2026.02.02 17:44:09 +0530

**Assistant Sessions Judge,**
**Attur.**